செய்தி வெளியீடு எண்:695 நாள்:07.09.2021

**செய்தி வெளியீடு**

திருப்பூர் மாவட்டம், ஆலாம்பாளையம் பூசாரிநாயக்கன் ஏரிப் பாசன விவசாயிகள் சங்க பிரதிநிதிகளின் கோரிக்கையினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆலாம்பாளையம் கிராமம் பூசாரிநாயக்கன் ஏரிப் பாசனத்திற்குத் திருமூர்த்தி அணையிலிருந்து 08.09.2021 முதல் இரண்டு சுற்றுக்கு 39.87 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்ட ஆலாம்பாளையம் கிராமத்திலுள்ள 88.56 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

சந்தீப் சக்சேனா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9